*324. வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் திருப்பூர் அரசாங்க மருத்துவமனையில் தற்போதுள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை ஆயிரம் தொழிலாளர்களுக்கு ஏழு படுக்கைகள் என்ற வீதத்தில் அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) தற்போது இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, திருப்பூர் நகரத்தில் 10,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அங்கே இப்போது ஆறு படுக்கைகள் மருத்துவ மனையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த எண்ணிக்கையை அதிகரிக்கும் முறையில், இ.எஸ்.ஐ. மருத்துவமனை கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, திருப்பூர் தொழிலாளர்களுக்காக நலத் திட்டம் ஒன்று ஏற்படுத்தி வைக்கப் பட்டது. இத்திட்டச் சலுகைகள் காப்புறுதி செய்துகொண்ட தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு 2—9—1961 முதற்கொண்டு நீடிக்கப்பட்டது. திருப்பூர் பகுதியில் 1974-75-ம் ஆண்டில் காப்புறுதி செய்துகொண்டவர்களது குடும்பங்கள் மொத்தம் 9,650 ஆகும். இம்மாநிலத்தைப் பொறுத்தவரையில் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் 1,000 குடும்பங்களுக்கு 11 படுக்கைகள் என்ற அடிப்படையில் உள்ளது. இத் திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்துகொண்டவர்களுக்கு திருப்பூர் அரசு மருத்துவ மனையில் 11 படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

சரக்குகள் போக்குவரத்து நிறுவனம்

*325. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

மாஜி ராணுவத்தினர்களுக்கென லாரி சர்வீஸ் ஒன்று துவக்கிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?